**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.43/2020**

**PW10**

| | | |
|---|---|---|
| **Name** | : | சுப்பிரமணி |
| **Father's Name** | : | குமாரசாமி |
| **Village** | : | தென்முடியனூர் |
| **Taluk/District** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.10.2025.
Accused present.

**முதல் விசாரணை**

நான் கிராம உதவியாளராக நெடுங்காவடி கிராமத்தில் பணி ஓய்வு பெற்று தற்போது தென்முடியனூரில் வசித்து வருகிறேன். நெடுங்காவடி கிராமத்தி சேர்ந்த நாராயணன் மகன் ஜெயபாலை எனக்கு தெரியும். அவர்தான் இவ்வழக்கின் எதிரி என்று எனக்கு தெரியும்( எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது) . வழக்கில் கொலையுண்டு இறந்த ராஜி என்பவரை தெரியும். கடந்த 25.04.2018 அன்று நான் நெடுங்காவடி கிராம உதவியாளராக பணிபுரிந்தபோது நானும் கிராம நிர்வாக அலுவலரும் அலுவலகத்தில் இருந்தோம். அப்போது காலை 5.00 மணிக்கு எங்கள் ஊரை சேர்ந்த ராஜி என்பவரை வெட்டிவிட்டார்கள் என்ற தகவல் தெரிந்து நானும் கிராம நிர்வாக அலுவலர் ஆனந்தனும் நெடுங்காவடி – கண்ணகந்தல் சாலை தனஞ்செயன் என்பவரின் நிலத்திற்கு அருகே சென்றோம். அங்கு சாத்தனூர் டேம் உதவி ஆய்வாளரும் வந்தார். அங்கு நான், கிராம நிர்வாக அலுவலர், உதவி ஆய்வாளர் மற்றும் ஜெயபால் இருந்தோம். அப்போது கிராம நிர்வாக அலுவலர் ஜெயபாலிடம் வெட்டுன கத்தி கொடுவா எங்கே இருக்கிறது என்று கேட்டார். அப்போது ஜெயபால் ஒரு கொட்டகையில் மறைத்து வைத்திருந்த கொடுவா மற்றும் இரும்பு பைப்பை எடுத்து உதவி ஆய்வாளரிடம் ஆஜர்படுத்தினார். ஜெயபால் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து

என்னுடையதுதான். அதை நான் காவல் நிலையத்தில்தான் கையொப்பம் செய்தேன். கைப்பற்றுல் மகசரில் உள்ள 2வது கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் போட்டேன். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.6.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் 25.04.2018 அன்று காலை 7.00 மணியளவில் நானும் , கிராம நிர்வாக அலுவலர் எங்கள் தரடாப்பட்டு அலுவலகத்தில் இருந்தபோது எதிரி ஜெயபால் என்பவர் கிராம நிர்வாக அலுவலரிடம் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதன் அடிப்படையில் அவரது வாக்குமூலத்துடன் நாங்கள் சாத்தனூர் காவல் நிலையத்தில் எதிரியை ஒப்படைத்தோம் என்றும், அவர் எங்கள் முன்னி'லையில் போலிசாரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதில் தன்னை அழைத்து சென்றால் கொலை செய்ய பயன்படுத்திய ஆயுதங்களை மறைத்து வைத்துள்ளதை எடுத்து தருவதாக சொன்னார் என்றும், நானும், கிராம நிர்வாக அலுவலர், எதிரியுடன் சென்று அவர் வீட்டின் அருகில் இருந்த பனஞ்சாலை முட்புதரில் மறைத்து வைத்தி'ருந்த இரும்பு பைப் ஒன்றையும், கொடுவா கத்தி ஒன்றையும் எடுத்து ஆஜர்படுத்தினார் என்றும், அவர் அணிந்திருந்த ரத்தக்கரை படிந்த லுங்கி ஒன்றை எடுத்து ஆஜர் படுத்தினார் என்றும், அதை போலிசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அதை நானும் கிராம நிர்வாக அலுவரும் கையொப்பம் செய்தோம் என்றும், தற்போது எதிரியை காப்பாற்றும் நோக்கில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரணை செய்தபோது நான், கிராம நிர்வாக அலுவலர், சாத்தனூர் டேம் உதவி ஆய்வாளரும் சம்பவ இடத்திற்கு சென்றதாக சொல்லியுள்ளேன். போலிஸ் விசாரணையில் எதிரியிடம் மறைத்து வைத்திருந்த ஆயுதங்கள் எங்கே என்று கிராம நிர்வாக அலுவலர் கேட்டார் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் கிராம நிர்வாக அலுவலரும் , உதவி ஆய்வாளரும் கேட்டார்கள் என்று சொல்லியுள்ளேன். அங்கிருந்து சாத்ததூர் டேம் காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டோம். எதிரி கொட்டாயில் மறைத்து வைத்திருந்த கொடுவா மற்றும் பைப்பை எடுத்து கொடுத்தார் என்ற விவரத்தை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை. நான் போலிசார்

சொல்லிக்கொடுத்தவாறு எதிரி கொட்டாயில் இருந்து வழக்கு சொத்துகளை எடுத்து ஆஜர்படுத்தினார் என்று பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.